# GTA Endoscopy Services Inc.

**305 மில்னர் அவென்யூ, சூட் 920,**
**ஸ்கார்பரோ, ON**
**தொலைபேசி: 416.321.3883**


## காஸ்ட்ரோஸ்கோபி (இரைப்பை அகநோக்கியல்)

காஸ்ட்ரோஸ்கோபி என்பது உணவுக்குழாய் (விழுங்கும் குழாய்), வயிறு மற்றும் மேல்சிறுகுடலின் (சிறு குடலின் மேல் பகுதி) ஆகியவற்றை பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு செயல்முறையாகும்.

## காஸ்ட்ரோஸ்கோபிக்கு முன்பு:

- பரிசோதனைக்கு 8 **மணிநேரத்திற்கு முன்பிலிருந்து அனைத்து உணவுகளையும் தவிர்த்திடுங்கள்**. பரிசோதனைக்கு முன்பான 4 மணிநேரம் வரையில் தண்ணீர் அல்லது ஆப்பிள் ஜூஸ் மட்டும் அருந்தலாம்
- பரிசோதனைக்கு 7 நாட்களுக்கு முன்பிலிருந்து **ஆஸ்பிரின் (ASA), வைட்டமின் E** மருந்துகளை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 10 நாட்களுக்கு முன்பிலிருந்து **Ozempic/Wegovy** மருந்தை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 5 நாட்களுக்கு முன்பிலிருந்து **Pradaxa** மருந்தை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 7 நாட்களுக்கு முன்பிலிருந்து **Clopidogrel (Plavix)** மருந்தை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 2 நாட்களுக்கு முன்பிலிருந்து **Xarelto** (Rivaroxaban) மருந்தை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 2 நாட்களுக்கு முன்பிலிருந்து **Eliquis** (Apixaban) மருந்தை நிறுத்திவிடுங்கள்
- பரிசோதனைக்கு 1 நாளுக்கு முன்பிலிருந்து **Rybelsus** மருந்தை நிறுத்திவிடுங்கள்
- நீங்கள் **Coumadin (Warfarin) மருந்து** எடுக்கிறீர்கள் என்றால் – இந்த மருந்து எடுத்துக் கொள்வதை எப்போது நிறுத்த வேண்டும் என்பது குறித்த குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைப் பெற பரிசோதனைக்கு முன்பு மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்
- உங்களது நடைமுறைக்கு முன்பான 48 மணிநேரத்திற்கு எந்த கஞ்சா கலந்த தயாரிப்புகளையும் **உட்கொள்ளாதீர்கள்**

## காஸ்ட்ரோஸ்கோபியின்போது என்ன நடக்கும்?

நீங்கள் எண்டோஸ்கோபி செய்யும் பிரிவிற்கு வந்ததும் நீங்கள் பதிவு செய்துக் கொள்வீர்கள், பின்னர் ஒப்புதல் படிவத்தில் கையொப்பமிடுமாறு உங்களிடம் கேட்கப்படும். பரிசோதனையை மயக்கமருந்து இல்லாமல் செய்ய முடியும், ஆனால் பெரும்பாலான மக்கள் நடைமுறையின்போது மயக்கத்தில் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். தொண்டையை உணர்ச்சியை மரத்துப் போகச் செய்வதற்கும், மூச்சுத் திணறலைக் குறைப்பதற்கும் மேற்பூச்சு மயக்க மருந்து பயன்படுத்தப்படும். காஸ்ட்ரோஸ்கோபியின்போது நீங்கள் மயக்கத்தில் இருப்பீர்கள் ஆனால் உணர்வுடன் இருப்பீர்கள். இந்த மயக்கம் இரண்டு மணி நேரம் வரை நீடிக்கும்.

**உங்களுக்கு மயக்கமருந்து கொடுக்கப்பட்டால்,** உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு அல்லது டாக்ஸியில் உங்களுடன் வருவதற்கு ஒரு பொறுப்பான வயதுவந்த நபர் உங்களுடன் இருக்க வேண்டும். பொதுப் போக்குவரத்தில் வீட்டிற்குச் செல்லவோ அல்லது தனியாக டாக்ஸியில் செல்லவோ நாங்கள் உங்களை அனுமதிக்கமாட்டோம். நீங்கள் நடைமுறையை மேற்கோளும் தினம் ஆபத்தான இயந்திரங்களை இயக்கவோ அல்லது வேலைக்குச் செல்லவோ கூடாது. இந்தக் காலகட்டத்தில் முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

காஸ்ட்ரோஸ்கோப் வாய் வழியாக உள்ளே செலுத்தப்படும். உங்கள் பற்களைப் பாதுகாக்க வாயைப் பாதுகாக்கும் உபகரணம் பயன்படுத்தப்படுகிறது. பொய்ப்பற்களை அகற்ற வேண்டும். காஸ்ட்ரோஸ்கோபி சங்கடமாக இருப்பதாக நீங்கள் உணர்ந்தாலும், அது பொதுவாக வலியை ஏற்படுத்தாது. உணவுக்குழாயில் ஸ்கோப் செலுத்தும்போது சிலருக்கு இருமல் அல்லது வாந்தி எடுக்க வேண்டுமென்ற தூண்டுதல் ஏற்படும்.



நடைமுறையின் போது சிறிய மாதிரிகள் (**பயாப்ஸிகள்**) எடுக்கப்படலாம். இவை நோயியல் நிபுணர் பரிசோதனை செய்வதற்காக ஆய்வகத்திற்கு அனுப்பப்படும். இந்தப் பரிசோதனையில் ஹெலிகோபாக்டர் பைலோரி எனப்படும் பாக்டீரியா இருக்கிறதா எனப் பார்ப்பது அடங்கும், இது வயிற்றுப்புண் (அல்சர்கள்) ஏற்படும் அபாயத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

நடைமுறைக்குப் பிறகு, மயக்கம் மற்றும் தற்காலிக இயலாமை நீங்கிய பிறகு, நீங்கள் மென்மையான உணவுகளைக் குடிக்கவும் சாப்பிடவும் அனுமதிக்கப்படுவீர்கள். அடுத்த நாள் உங்கள் வழக்கமான உணவைத் தொடரலாம். காஸ்ட்ரோஸ்கோபி செய்ய சுமார் 5 நிமிடங்கள் மட்டுமே ஆகும், நீங்கள் 30-45 நிமிடங்கள் வரை மீண்டுவரும் பிரிவில் இருப்பீர்கள். நீங்கள் வீட்டிற்குச் செல்வதற்கு முன் பரிசோதனையின் முடிவுகளை உங்களுக்குத் தெரிவிப்போம்.

## காஸ்ட்ரோஸ்கோபிக்குப் பிறகு என்னென்ன அறிகுறிகள் ஏற்படலாம்?

மயக்கத்தின் விளைவுகள் நாள் முழுவதும் நீடிக்கலாம்., இதனால் உங்களுக்கு மயக்கமாக இருக்கலாம். அந்த நேரத்தில், நீங்கள் மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக காஸ்ட்ரோஸ்கோபியின்போது அதிக திணறல்/குமட்டல் ஏற்பட்டால் உங்களுக்கு தொண்டை வலி இருக்கலாம். இது பொதுவாக ஓரிரு நாட்களில் சரியாகிவிடும். இதற்கு நீங்கள் lozenges ஐப் பயன்படுத்தலாம். பெரும்பாலான மக்கள் உட்செலுத்தப்பட்ட காற்றின் காரணமாக சற்று வயிறு உப்பலாக இருப்பதாக உணர்கிறார்கள். உங்களுக்கு கடுமையான வலி அல்லது வேறு ஏதேனும் கவலைக்குரிய அறிகுறிகள் இருந்தால், நீங்கள் காஸ்ட்ரோஸ்கோபி செய்து கொண்ட மருத்துவர் அல்லது உங்கள் குடும்ப மருத்துவரைத் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது அருகிலுள்ள மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லவும்.

## காஸ்ட்ரோஸ்கோபியில் உள்ள ஆபத்துகள் என்ன?

அனுபவம் வாய்ந்த எண்டோஸ்கோபி நிபுணர்களிடம் காஸ்ட்ரோஸ்கோபி செய்து கொண்டால் ஆபத்துகள் மிகக் குறைவு. ஆபத்துகளில் பின்வருவன அடங்கும்:

- இரத்தப்போக்கு
- துளைப்பு
- உறிஞ்சி நீக்குதல் (நுரையீரல் திரவத்தை உள்ளிழுப்பது)
- உணவுக்குழாயில் காயம்
- தொண்டைப் புண், பல் பாதிப்பு

காஸ்ட்ரோஸ்கோபி என்பது மிகவும் பொதுவான, பாதுகாப்பான நடைமுறையாகும். இந்த நடைமுறையுடன் தொடர்புடைய சில ஆபத்துகள் இருப்பினும், நோயை சரியாக கண்டுபிடிக்கக்கூடிய நன்மைகளோடு சீர்தூக்கிப் பார்க்கையில் பெரும்பாலான நிகழ்வுகளில் இந்த நடைமுறை பயனளிப்பதாகவே உள்ளது.